இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 158 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 05 – சனிக்கிழமை 18 ஜனவரி 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 158 : Thiruvalluvar Year - 2056 - Thai 05 - Saturday 18 January 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைக்கிறார்! அமைச்சர் பெருமக்கள் - சட்டவல்லுநர்கள் - முன்னணியினர் பங்கேற்பு!

# கழக சட்டத்துறை மூன்றாவது மாநில மாநாடு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

**சென்னை, ஜன. 18 -**

**‘கழக சட்டத்துறை மூன்றாவது மாநில மாநாடு - 2025; செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகம், ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை, சென்னை - 30, (பச்சையப்பன் கல்லூரி எதிரில்) எனும் முகவரியில் இன்று (18.01.2025 - சனிக்கிழமை) காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை நடைபெறுகிறது.**

**இம்மாநாட்டின் நிறைவாக கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மாநாட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.**

இம்மாநாடு மங்கள இசை - திராவிட இயக்கப் பாடல்களுடன் காலை 7 மணியளவில் தொடங்குகிறது. பழைய சீவரம் ஜி.காளிதாஸ், கோவேரி ஜி.வினோத்குமார் ஆகியோர் நாதசுவரமும், அடையாறு ஜி.சிலம்பரசன், கும்மிடிப்பூண்டி ஆர்.ஜீவா, எண்ணாயிரம் எஸ்.காமராஜ், வளவனூர் ஆர்.குமரன் ஆகியோர் தவிலும் இராணிப்பேட்டை ஏ.சதீஷ் தாளமும் வாசிக்கின்றனர்.

காலை 8.45 மணிக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கழகக் கொடியேற்றி வைக்கிறார்.

மாநாட்டை காலை 8.50 மணியளவில் அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைக்கிறார்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கும் இம்மாநாட்டிற்கு இரா.கிரிராஜன் எம்.பி. முன்னிலையும், இரா.தாமரைச்செல்வன் வரவேற்புரையும், என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையும் வகிக்கின்றனர்.



கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி துவக்க உரை ஆற்றுகிறார்.

அதை தொடர்ந்து, தந்தை பெரியார் படத்தை - வழக்கறிஞர் இரா.விடுதலையும், பேரறிஞர் அண்ணா படத்தை - என்.ஆர்.இளங்கோ எம்.பி.யும், முத்தமிழறிஞர் கலைஞர் படத்தை - கே.எம்.தண்டபாணியும், டாக்டர் அம்பேத்கர் படத்தை - பி.ஆர்.அருள்மொழியும், பேராசிரியர் படத்தை - என்.மணிராஜியும் திறந்து வைக்கின்றனர்.

இதில் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, எஸ்.இரகுபதி, பி.கே.சேகர்பாபு, மா. சுப்பிரமணியன், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., மயிலை த.வேலு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

ஜெ.பச்சையப்பன் நன்றி கூறுகிறார்.

முதல் அமர்வாக காலை 10 மணியளவில் என்.ஆர்.இளங்கோ எம்.பி.யின் வரவேற்புரையுடன் ‘ஒரு நாடு ஒரு தேர்தல்’ கலந்துரையாடலில், மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் எஸ்.ஒய்.குரேஷி, மூத்த பத்திரிகையாளர் ‘இந்து’ என்.ராம் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

க.பரந்தாமன் எம்.எல்.ஏ. நன்றி கூறுகிறார்.

இரண்டாவது அமர்வாக பகல் 11.45 மணியளவில் திராவிடவியல் கருத்தரங்கம் நடைபெறுகிறது. சே.சந்துரு தொகுத்து வழங்குகிறார். கே.எஸ்.ரவிச்சந்திரன் வரவேற்புரையும் இரா.விடுதலை முன்னிலையும் வகிக்கின்றனர்.

‘திராவிடவியல்’ எனும் தலைப்பில் ஆ.இராசா எம்.பி.யும், ‘திராவிடமும் பொருளாதார மாற்றமும்’ எனும் தலைப்பில் முனைவர் ஜெ.ஜெயரஞ்சனும், திராவிடமும் தமிழ்த் தேசியமும் எனும் தலைப்பில் பேராசிரியர் அ.கருணானந்தனும், திராவிடம் பேசும் சமத்துவம் எனும் தலைப்பில் சே.மெ.மதிவதனியும், திராவிடத்தால் விளைந்த சமூக மாற்றம் எனும் தலைப்பில் ஊடகவியலாளர் மில்ட்டனும் உரையாற்றுகின்றனர்.

வீ.கவிகணேசன் நன்றி கூறுகிறார்.

பிற்பகல் 2 மணியளவில் புதுகை பூபாளம் கலைக் குழுவின் சிந்தனை சிறப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மூன்றாவது அமர்வாக பிற்பகல் 2.30 மணியளவில் ‘இந்திய மக்களாகிய நாம்’ கருத்துரை நிகழ்வை பெ.ரகு தொகுத்து வழங்குகிறார். சூர்யா வெற்றி கொண்டான் வரவேற்புரையும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. முன்னிலையும் வகிக்கின்றனர்.

இந்திய மக்களாகிய நாம் எனும் தலைப்பில் திருச்சி சிவா எம்.பி.யும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டமும் மகளிர் உரிமைகளும் எனும் தலைப்பில் வழக்கறிஞர் அ.அருள்மொழியும், மாநில உரிமைகள் எனும் தலைப்பில் சூர்யா சேவியரும், இட ஒதுக்கீடு எனும் தலைப்பில் தமிழ் காமராசனும், மாநில நிதிப் பகிர்வு எனும் தலைப்பில் இந்திரகுமார் தேரடியும் உரையாற்றுகின்றனர். மருது கணேஷ் நன்றி கூறுகிறார்.

மாலை 4 மணியளவில் கலைமாமணி ஆக்காட்டி ஆறுமுகம் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மாலை 4.30 மணியளவில் மாநாடு நிறைவு நிகழ்ச்சிக்கு ஆர்.எஸ்.பாரதி முன்னிலையும், இரா.விடுதலை வரவேற்புரையும், என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையும் வகிக்கின்றனர்.

அமைச்சர் துரைமுருகன், டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் கே.என்.நேரு, அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோர் உரையாற்றுகின்றனர். கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.

ஈரோடு எஸ்.இராதாகிருஷ்ணன் நன்றி கூறுகிறார்.

இம்மாநாட்டில் மாநில நிர்வாகிகள் ஆர். விடுதலை, என்.ஆர்.இளங்கோ, இ.பரந்தாமன், கே.எஸ்.இரவிச்சந்திரன், என். மணிராஜ், கே.எம்.தண்டபாணி, சு.ராதாகிருஷ்ணன், பி.ஆர்.அருள்மொழி, இரா. தாமரைச் செல்வன், ஜெ.பச்சையப்பன், சூர்யா வெற்றி கொண்டான், கே.சந்துரு, பெ.ரகு, ஜி.சந்திரபோஸ், என்.மருதுகணேஷ், எஸ்.ராஜா முகம்மது, கே.ஜெ.சரவணன், வீ.கவி கணேசன், கே.மறைமலை, வி.முத்துக்குமார், எ.சுவை கே.சுரேண், எஸ்.எஸ்.மனோஜ், மூ. தினேஷ்குமார், எம்.எஸ்.பி.வீரமணி, மீஞ்சூர் கே.சுரேஷ், எ.கலாநிதி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மாநாட்டை கழக வழக்கறிஞர் அணி அனைத்து மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஒருங்கிணைக்கின்றனர்.

---

### ‘சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா’ கலைஞர்களுக்கு

# ஒரு நாள் ஊதியம் ரூ.5,000/ ஆக உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜன.18-

‘சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா’வில் பங்கேற்கும் 1500 கிராமியக் கலைஞர்களுக்கு ஒரு நாள் ஊதியம் தலா ரூ.5,000/ ஆக உயர்த்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் “சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா” கலை நிகழ்ச்சிகள் சென்னையில் மெரினா கடற்கரை, கோயம்பேடு - சென்னை புறநகர் பேருந்து நிலையம், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், மாதவரம் புறநகர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் 5 மின்னணு வீடியோ வாகனங்கள் மூலம் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் உத்தரவுக்கு இணங்க தமிழ்ப்பண்பாட்டை வளர்க்கும் ‘சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா’ நிகழ்ச்சி கலை பண்பாட்டுத் துறை சார்பில் கடந்த மூன்று ஆண்டுகளாக வெற்றிகரமாக நடந்து முடிந்ததையடுத்து, இந்தாண்டிற்கான சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.1.2025 அன்று சென்னை, கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ.வெ.ரா நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத் திடலில் தொடங்கி வைத்தார்கள்.

சென்னையில் உள்ள 18 இடங்களில் 14.1.2025 முதல் 17.1.2025 வரை நான்கு நாட்கள் மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை நடைபெறும் இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியில் தற்போது 1500 கிராமியக் கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர். இவர்கள் 75 கலைக் குழுக்களாக பிரிந்து 50 வெவ்வேறு கலை வடிவங்களை நிகழ்த்தி வருகின்றனர்.

சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் பங்குபெறும் கிராமியக் கலைஞர்களுக்கு தங்கும் இடம், உணவு, 2 உடைகள், போக்குவரத்து வசதிகள் உட்பட அனைத்தும் தமிழ்நாடு அரசால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது .

இது தவிர அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு நாள் ஊதியம் ரூ.5,000/ ஆக உயர்த்தி வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்கள்.

செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் ‘சென்னை சங்கமம்நம்ம ஊரு திரு விழா’ கலை நிகழ்ச்சிகளை பொது மக்கள் அதிக அளவில் கண்டுகளிக்கும் வண்ணம் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், வேலூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள மின்னணு வீடியோ வாகனங்கள் சென்னைக்கு வர வழைக்கப்பட்டு, சென்னையில் மெரினா கடற்கரை, கோயம்பேடு - சென்னை புறநகர் பேருந்து நிலையம், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் 13.1.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த நிகழ்ச்சியையும், 14.1.2025 அன்றைய கலை நிகழ்ச்சி களையும் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, செய்தி மக்கள் தொடர்பு துறையின் மின்னணு வீடியோ வாகனங்கள் மூலம் 15.1.2015 முதல் 17.1.2025 வரை மூன்று நாட்கள் நடைபெறும் ‘சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா’ கலை நிகழ்ச்சிகளை சென்னையில் மெரினா கடற்கரை, கோயம்பேடு - சென்னை புறநகர் பேருந்து நிலையம், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் சென்னை சங்கமம்நம்ம ஊரு திரு விழா” கலை நிகழ்ச்சிகளை செய்தி மக்கள் தொடர்பு துறையின் மின்னணு வீடியோ வாகனங்கள் மூலம் மேற்கண்ட இடங்களில் நேரடியாக கண்டு களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

### பல்கலைக்கழக துணை வேந்தர்கள் நியமன விவகாரம்:

# ஆளுநரின் உத்தரவிற்கு தடை விதிக்க வேண்டும்!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு!

புதுடெல்லி, ஜன.18-

பல்கலைக்கழக துணை வேந்தர்கள் நியமன விவகாரத்தில் ஆளுநர் உத்தரவிற்கு தடை விதிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் உள்ளிட்ட 6 பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் பணியிடம் காலியாக உள்ளது. பல்கலைக் கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்க தமிழக அரசு தேடுதல் குழுவை அமைத்தது. யு.ஜி.சி



தலைவரை சேர்த்து துணைவேந்தர்களை நியமிக்க ஆளுநர் ஆர்.என்.ரவி ஒரு தேடுதல் குழுவை அமைத்து உத்தரவிட்டார்.

தலைவரையும் சேர்த்து தேடுதல் குழு அமைக்க வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் தமிழ்நாடு அரசுக்கு அறிவுறுத்தினார்.

ஆளுநரின் இந்த உத்தரவுக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் யு.ஜி.சி

தமிழக அரசு யு.ஜி.சி தலைவரை விடுத்து மூன்று உறுப்பினர் கொண்ட தேடுதல் குழுவை அமைத்து அரசாணையை வெளியிட்டது.

துணைவேந்தர்கள் நியமன விவகாரத்தில் ஆளுநரின் செயல்பாடு அரசியல் சாசன விதிகளுக்கு முரணாக உள்ளது.

துணைவேந்தர்கள் நியமனத்தில் ஆளுநரின் தலையீடுகளை கருத்தில் கொண்டு வழக்கை விசாரிக்க வேண்டும்.

துணைவேந்தர் நியமன விவகாரத்தில் ஆளுநரின் உத்தரவுகளை ரத்து செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வர உள்ளது.

### சாட்டை எங்கே...?

